9th December 1961]

Closure of a Hotel (Tiruchirappalli town)

* 2207 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI P. S. K. LAKSHMIPATHY RAJ): கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி பெரிய கடை வீதியிலிருக்கும் ஸ்ரீ. கிருஷ்ணபவான் ஹோட்டல் மூடியது சம்பந்தமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Tiruchi District Hotel Workers' Union, Tiruchirappalli raised an Industrial dispute over the closure of the hotel. The Labour Officer, Tiruchirappalli held conciliation and submitted his report to Government. After considering his report, the Government have passed orders declining adjudication.

SRI A. A. RASHEED: Is it a fact that this hotel was closed because the size and quality of the food prepared there were not up to the standard?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not know the reasons for the closure of the hotel. But, I know this much. The hotel was definitely closed. The management of the hotel said that they could no longer run it.

Ambar Charkas

* 2208 *Q.*—SRI A. R. MARIMUTHU: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இதுவரை நம் ராஜ்யத்தில் எத்தனை அம்பர் ராட்டைகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அவைகளில் எத்தனை வேலை செய்யவில்லை ?

(உ) 1960-61-ல் எவ்வளவு நூல் உற்பத்தி செய்யப்பட்டது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) 25,170 up to 28th February 1961.

(இ) 12,828.

(உ) 11,541.

Dysentery cases (North Arcot)

DEPUTY SPEAKER: கேள்வி 2209.

SRI S. M. ANNAMALAI: இது முக்கியமான கேள்வியாக இருப்பதினாலே அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கோருகிறேன்.

[9th December 1961

DEPUTY SPEAKER : இன்னும் கேள்வி கேட்கப்பட்டு, பதில் அளிக்கப்படவில்லையே? அதற்குப் பிறகு உப கேள்விகள் கேட்ட பிறகு தானே நீங்கள் அரை மணி நேர விவாதம் வேண்டும் என்று கேட்கலாம்.

* 2209 *Q.*—SRI N. K. PALANISAMI :
SRI V. K. KOTHANDARAMAN :
SRI M. SELVARAJ :
SRI S. M. ANNAMALAI :
} Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there have been any cases of dysentery, diarrhoea, cidima and swelling in the Virudhachalam taluk in the South Arcot district, Polur and Arani taluks in the North Arcot District;

(*b*) if so, the number of persons affected and the number of deaths caused thereby;

(*c*) whether any investigation has been conducted to find out the reasons for the outbreak of these diseases;

(*d*) if so, the details thereof; and

(*e*) the steps taken by the Government in this regard?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*e*) A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இது முக்கியமான கேள்வியாக இருப்பதினுல், இதற்கு முன்பு இதுபற்றி கேள்வி கேட்கப்பட்டு, தகுந்த பதில் சொல்லப்படாத காரணத்திஞல், அரை மணி நேர விவாதத்திற்கு அவகாசம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பட்ஜெட் விவாதம் வருகிறது. அந்த விவாதத்தின் போது இதைப்பற்றி பேசலாம்.

DEPUTY SPEAKER : The Budget will be presented today and the hon. Member will have an opportunity to speak on this subject during the general discussion on the Budget. Moreover, I think the Hon. Minister has replied to a similar question sometime back.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த நோய் அங்கே தோன்றுவதற்குக் காரணம் அவர்களுக்குப் போதுமான சத்துள்ள உணவு கிடைக்காதது தான் என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு சத்துள்ள உணவு எது குறைவாக இருக்கிறதோ அந்த உணவை உடனடியாக அந்த வட்டாரத்திலுள்ள எளிய மக்களுக்கு அளிப்பதற்கு அமைச்சர் அவர்களிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

---

[a] **Printed as Appendix II on 290 page infra.**